# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1857/8 - 2014 අප්‍රේල් මස 09 වැනි බදාදා - 2014.04.09

*1857/8 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*212 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்*

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 212 (2) (இ) ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் நோக்கத்திற்காக ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2014, மாச்சு 31.*

**ஒழுங்குவிதிகள்**

*உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் உரிய ஏற்பாடுகளுடன் இணங்கியவாறு, 2012, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரோ தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில், நிதிக் கூற்றுக்களை தயாரிக்குகையில் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமனங்கள்/இலங்கை கணக்கீட்டு நியமனங்களை முதன்மைக் கூறுகளாக கொண்டிருக்கின்ற, இலங்கை கணக்கீட்டு நியமனங்களை பின்பற்றி இலாபங்கள் அல்லது வருமானத்தினை கணிப்பீடு செய்வதில் பின்வரும் சீராக்கல்கள், வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் தேவையான தகவல்களும் வழங்கப்படுதலும் வேண்டும்.*

| இல. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் | வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள் |
|---|---|---|
| 1.0 | இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களை (இநிஅநி I இன்படி) முதன்முறையாக பின்பற்றுதல். | 1.1 சொத்துக்களின் ஏற்பிசைவுகள், ஏற்பிசைவு விலக்குதல்கள், மீள் வகையீடுகள் மற்றும் கணக்கிணக்கங்கள் தொடர்பான விபரங்கள் ஆரம்ப நிறுத்தி வைத்தல் சம்பாத்திங்கங்களுக்கான அனைத்து சீராக்கல்களுடன் வழங்கப்படுதல் வேண்டும். |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| இல. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் | வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள் |
|---|---|---|
| | | 1.2 முதன்முறையாக இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களை (இ.நி. அ. நி.) பின்பற்றுவோர் அது தொடர்பில் ஏற்படுகின்ற செலவினத்தினை (மூலதன செலவினம் தவிர்ந்த) சமமான தவணைக் கட்டணங்களில் மூன்று வருட காலப்பகுதிக்கு விரிவாக்குதல் வேண்டும். (அதாவது, செலவினம் ஏற்பட்ட வருடமும் அடுத்து வரும் 2 வருடங்களும்)<br><br>1.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மறு அறிக்கையிடல் தொடர்பான நிலைமாற்றம், சீராக்கல்களின் கீழ் ஏதேனும் மேலதிக பொறுப்புடமை அல்லது மிகைக் கொடுப்பனவினைத் தீர்மானிப்பதற்காக விற்பனையின் போது இருக்கவேண்டிய "விற்பனைக்கென இருக்கும் சொத்துக்கள்" இற்கான சீராக்கல் போன்ற ஏதேனும் மூலதன கொடுக்கல் வாங்கல் தொடர்பானவை தவிர்ந்தவை கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். முதலாம் வருட பின்பற்றலின் மேலதிக வரி அல்லது மீளளிப்பு நிலைமை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.<br><br>1.4 கீழ்வரும் நிலைமாற்றம் ஏற்படுகின்ற சீராக்கலானது ஒரே தடவையிலான வரி விதிப்பாக இருத்தல் வேண்டும்.<br><br>(அ) அச்சீராக்கம் ஓர் மேலதிக வரியை விளைவிக்குமாயின், தீர்த்தலானது சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட வரி மதிப்பீட்டாண்டிலும் உடனடுத்து வரும் இரண்டு ஆண்டுகளிலும் சமமான தவணைக் கட்டணங்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் ; மற்றும்<br><br>(ஆ) அச்சீராக்கம் ஓர் மிகைக் கொடுப்பனவை விளைவிக்குமாயின், மீளளிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது. ஆனால் மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் வரி மதிப்பீட்டாண்டிலுள்ள வருமான வரி பொறுப்புக்கெதிராகவும் உடனடுத்துவரும் இரண்டு ஆண்டுகளிற்கும் எதிரீடு செய்வதற்கு அனுமதியளிக்கப்படும்.<br><br>1.5 மாற்றீட்டின் மீது நிறுத்தி வைத்த சம்பாத்தியங்கள் அல்லது இலாபங்களில் செலுத்தப்படுகின்ற பங்குலாபமெனில், அத்தகைய பங்கிலாபமானது தற்போதைய ஏற்பாடுகளின் கீழ் வரி விதிப்பதற்கு பொறுப்பாதல் வேண்டும். |
| 2.0 | சரக்குத் தொக்குகள் (இ. க. நி. 2 இன்படி) | 2.1 நடைமுறையல்லா சொத்தாக இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (இ. க. நி.) இணங்கியவாறு மீள் வகைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் சரக்குத் தொக்கானது, (உதாரணம்: திரும்பக்கூடிய பொதியிடல் பொருட்கள்) தற்போதைய வரி அறவீட்டு செயற்பாடுகளுடன் இணங்கியவாறான சரக்குத் தொக்காக தொடர்ந்தும் கருதப்படுதல் வேண்டும்.<br><br>2.2 பிற்போடப்பட்ட தீர்ப்பனவு நியதிகளுக்கமைவாக, சரக்குத் தொக்குகள் கொள்வனவு செய்யப்படுகின்ற போது நிதிச் செலவு கூறானது, வரி நோக்கங்களுக்கான கொள்வனவு தொகையிலிருந்து வேறாக்கப்படலாகாது. மொத்தப் பொருள் விலை விபரப்பட்டியலின் பெறுமதியானது, வரி நோக்கங்களுக்காக கருத்தில் கொள்ளப்படுவதுடன், ஏதேனும் சேர்க்கப்பட்ட வட்டிக்கூறு இலாப நட்டக் கணக்கில் விதிக்கப்பட்டிருக்குமாயின், அது மறுக்கப்படும். |
| 3.0 | நிர்மாண ஒப்பந்தங்கள் (இ. க. நி. 11 இன்படி) | 3.1 மேற்கொள்ளப்பட்ட சான்றுப்படுத்திய வேலைக்கு ஏற்படக்கூடிய செலவு மாத்திரம் வரி நோக்கத்திற்காக, அனுமதிக்கப்படுதல் வேண்டும்.<br><br>3.2 ஊக்குவிப்பு கொடுப்பனவு போன்ற ஏனைய பெறுகைகளும் வரி விதிப்புக்குள்ளாகும்.<br><br>3.3 செலவொன்றாக அங்கீகரிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நட்டமானது, உண்மையில் ஏற்பட்ட நட்டமாக இருக்கும் வரையில் அனுமதிக்கப்படமாட்டாது. |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| *இல.* | *பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம்* | *வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள்* |
|---|---|---|
| | | 3.4 பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணக் கொடுப்பனவினைப் பயன்படுத்தி ஈட்டப்பட்ட ஏதேனும் வட்டி வருமானம், வருமானத்தின் வேறானதொரு மூலமாக கருதப்படுதல் வேண்டும்.<br><br>3.5 ஏதேனும் கொடுப்பனவின் நிறுத்தி வைத்தலானது பெறுவனவாக கருதப்படுவதுடன், அத்தகைய நிறுத்தி வைத்தலின் போது வரி விதிக்கற்பாலதாகவும் கருதப்படல் வேண்டும்.<br><br>3.6 எதிர்கால செலவானது, அது ஏற்படும் வரையில் வரி விதித்தல் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்படலாகாது. |
| 4.0 | வருமான வரிகள் (இ. க. நி. 12 இன்படி) | அனைத்து பிற்போடப்பட்ட வரி வெளிப்படுத்துகைகளும் நியமத்தின்படி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| 5.0 | ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (ஆ. பொ. உ) (இ. க. நி. 16 இன்படி) | 5.1 முன்னைய காலப்பகுதிகளில், வரி நோக்கத்திற்காக காணி மீது தவறுதலாகக் கோரிய தேய்மான விடுதொகை சீராக்கப்பட வேண்டும்.<br><br>5.2 காணி மற்றும் கட்டிடத்தின் வரலாற்று கிரயத்தில் வேறுபடுத்தலானது, அக்காணி மற்றும் கட்டிடத்தின் நடைமுறை சந்தைப் பெறுமதியின் விகிதாசாரத்தில் இருத்தல் வேண்டும். காணி மற்றும் கட்டிடத்திற்கிடையிலான கிரயப் பகிர்வு தொடர்பான அட்டவணையொன்று வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>5.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் மூலதனமாக்கப்பட்ட கிரயம் பொருள் விலை விபரப்பட்டியலின் பெறுமதியில் இருத்தல் வேண்டும். இதற்கமைவாக, விரிவான வருமானக் கூற்றில் நிதிக் கிரயமாக அறவிடப்பட்ட சேர்ந்த வட்டியானது அனுமதிக்கப்படலாகாது. சொத்துக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்ட சேர்ந்த வட்டியின் விபரங்கள் தேவையான சீராக்கல்களுக்காக, சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.<br><br>5.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் நிர்மாணம் அல்லது கைக்கொள்ளலுக்காக நேரடியாக ஏற்படக்கூடிய பதவியணியினர் இயைபான கிரயமானது, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கிரயத்தில் உள்ளடக்குவதற்கு அனுமதியளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு ஏற்படக்கூடிய இயைபான பதவியணியினர் கிரய அட்டவணையானது வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>5.5 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் மனை மீளமைத்தல் என்பவற்றின் கைவிடுதல், கழட்டுதல், அகற்றுதல் தொடர்பான கிரய ஒதுக்கம்/ மதிப்பீடுகள், அத்தகைய கிரயம் ஏற்படும். வரையில், வரி நோக்கத்திற்காக அனுமதிக்கப்படமாட்டாது.<br><br>5.6 சொத்தொன்று மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும் நிலைமையொன்றில்,<br><br>(அ) கைக்கொள்ளல் கிரயமே, தேய்மான விடுதொகையின் அடிப்படையாக அமையும் ;<br><br>(ஆ) ஆதனதம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள் பெறுமதி மதிப்பீட்டுடன் தொடர்புடைய தொழில்சார் கட்டணங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு செலவுகள், வரி நோக்கங்களுக்கு அனுமதிக்கப்படமாட்டாது. இச்செலவுகள் வேறாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| இல. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் | வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள் |
|---|---|---|
| | | 5.7 பகுதி பகுதியாக்குகையில்,<br>(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதியாக்குகையினைக் கருத்தில் கொள்ளாது, தேய்மான விடுதொகை அனுமதியளிக்கப்படும் ;<br>(ஆ) இலங்கை கணக்கீட்டு நிமமங்களின் கீழ் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த கிரயத்திற்கிடையிலான கணக்கிணக்கம் மற்றும் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களின் கீழான அதே ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதியாக்கல் செலவு, முதன்முறைப் பின்பற்றுவோரினால் வழங்கப்படுதல் வேண்டும்.<br>5.8 உதிரிப் பாகங்கள் மற்றும் பயன்படுத்தத்தகு பொருட்கள் என்பன இருப்பாகக் கருதப்படுவதுடன், அவை நுகரப்படுகையிலேயே கிரயம் அறவீட்டு கணக்கிற்குட்பட வேண்டும். |
| 6.0 | குத்தகைகள்<br>(இ. க. நி. 17 இன்படி) | 6. 1 வரி விதிப்பு நோக்கங்களுக்காக, குத்தகை வசதியளித்தலின் சட்ட ரீதியான வடிவம் அல்லது கொடுக்கல் வாங்கல், கவனத்தில் கொள்ளப்படும்.<br>6.2 குத்தகை சொத்துக்களின் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் மீள் வகைப்படுத்தலுக் கிணங்க நிதிக் குத்தகையொன்று தொழிற்பாட்டுக் குத்தகையாக மாற்றம் பெறுகின்ற சூழ்நிலையொன்றில் அல்லது அதற்கு மறுதலையான சூழ்நிலையாக இருக்கின்ற போதிலும் இரண்டு தரப்பும் பழைய கொள்கைகளை முறையாகப் பிரயோகிக்குமிடத்து, மீள் வகைப்படுத்தல் பயனுறுத்தப்படுகின்ற வரி மதிப்பீட்டாண்டிலிருந்து அத்தகைய குத்தகையானது மீதி காலப்பகுதிக்கும் அதே அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.<br>6. 3 குத்தகை தொடர்பான முன்னைய நியமங்களுடன் இணக்கப்பாட்டில் வழுக்கள் காணப்படுமிடத்து, அவ்வழுக்களின் விளைவுகளினைத் தொடர்ந்து வரும் வரியானது, அதற்கமைவாக சீராக்கப்படுதல் வேண்டும்.<br>6.4 வரி நோக்கங்களுக்காக, அனுமதிக்கப்பட வேண்டிய குத்தகை, வாடகை கொடுப்பனவுகள் பிரிவு 26 இல் விதித்துரைக்கப்பட்ட வரையறைக்குட்பட்டு ஏற்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகையாக இருத்தல் வேண்டும். |
| 7.0 | வருமானம்<br>(இ. க. நி. 18 இன்படி) | 7.1 பிற்போடப்பட்ட வருமானம் தொடர்பில், விற்பனை வருமானத்தில் (விற்பனை மற்றும் நிதி வருமானப் பாகங்களின் விபரம்) பொதிந்துள்ள சேர்ந்த வட்டியாக இருக்குமிடத்து விலை விபரப்பட்டியலின் முழுப்பெறுமதியும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.<br>7.2 பிற்போடப்பட்ட வருமானத்தின் முக்கிய பகுதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.<br>7.3 சிறப்புரிமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரி விதிப்புக்குட்படும் புரள்வானது, சேவைகளின் பயன்படுத்தப்பட்ட அல்லது பிற்போடப்பட்ட பகுதிக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாக இருத்தல் வேண்டும். வருமானம் தேறும் வேளையிலேயே வரி நோக்கங்களுக்காக வருமானமாக அங்கீகரிக்கப்படும்.<br>7.4 ஒத்திசைவற்ற பொருட்கள் பரிமாற்றம் செய்யப்படுமிடத்து, வருமானமானது வரி நோக்கங்களுக்காக தனித்தனியாகக் கருதப்படுதல் வேண்டும். புதிய பொருட்களின் வழங்குகைக்கான செலவானது, பெறப்பட்ட பொருட்களின் பழைய சந்தைப் பெறுமதியுடன் பரிமாற்றத்தின் போது உள்ளடக்கப்பட்ட ஏதேனும் காசுப் பெறுமானத்தையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும். |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| இல. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் | வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள் |
|---|---|---|
| | | 7.5 பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளின் இலவச வழங்குதலானது, வருமானம் தேறும்போது வரி நோக்கங்களுக்காக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். இலவச வழங்குதலுடன் தொடர்புடைய செலவானது, செலவாக கழிப்பனவு செய்யத்தக்கதாகும். |
| 8.0 | ஊழியர் நன்மைகள் (இ. க. நி. 19 இன்படி) | 8.1 இலாப பங்கீட்டுத் திட்டங்களானது, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அவரின் அதிகாரத்தின் கீழ் ஏலவே அதன் கணிப்பீட்டு அடிப்படை அங்கீகரிக்கப்பட்டிருப்பின், வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கப்படும்.<br><br>8.2 விரிவான வருமானக் கூற்றில் அறவீடு செய்யப்பட்ட ஏதேனும் ஏற்பாடுகள் அல்லது இழப்புக்களின் பெறுமதி மதிப்பீடுகள் வரி நோக்கங்களுடன் தொடர்பற்றவையாக இருத்தல் வேண்டும்.<br><br>8.3 வட்டியல்லாக் கடன்கள் :- விடுதலை அல்லது சலுகை விகித அடிப்படையிலான வட்டி நன்மைகள் மீது வரி விதிக்கப்படுதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, வரி விதிக்கப்பட வேண்டிய வட்டியானது, நிதிசார் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டவாறானதாக தாக்கறு வட்டி வீதத்தின் அடிப்படையிலானதாக இருத்தல் வேண்டும்.<br><br>8.4 ஏனைய குறுகிய கால ஊழியர் நன்மைகளுடன் இணைந்த நன்மைகள் (அன்பளிப்பு பொருட்கள்/சேவைகள், குறைக்கப்பட்ட விலைகள், கொண்டு நடாத்தும் செலவில் குறைத்து ஏலமிடப்பட்ட சொத்துக்கள் போன்றவை) ஊழியர்களுக்கு நன்மையளிப்பனவையாயும், வரி நோக்கங்களுக்குரியவையாயும் கருதப்படுதல் வேண்டும். |
| 9.0 | அரச மானியங்களும் உதவுத்தொகையும் (இ. க. நி. 20 இன்படி) | 9.1 அரச மானியங்கள், உதவுத்தொகைகள் போன்றவை அளிக்கப்பட்ட வரி விலக்களிப்பு விடயதானத்துக்கமைய, வரி நோக்கங்களுக்கு உரியவையாகக் கருதப்படுதல் வேண்டும்.<br><br>9.2 மேற்கூறப்பட்ட, மானியம் போன்றவற்றினை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்தொன்றாக இருக்குமிடத்து அத்தகைய சொத்துப் பெறுமதியின் மீதான தேய்மான விடுதொகை உரிய ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்படுதல் வேண்டும். |
| 10.0 | வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின் மாற்றங்களினால் ஏற் படும் விளைவுகள் (இ. க. நி. 21 இன்படி) | 10.1 வரி நோக்கங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள், இலங்கை ரூபாய்களின் நியதிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.<br><br>10.2 மூலதனவாக்க தன்மையுடைய நாணய வகையறாக்களின் மாற்றீடு தொடர்பில் எழுகின்ற பரிமாற்று வித்தியாச நன்மை, வரி விதிப்புக்குள்ளாகக் கூடாது என்பதுடன் ஏதேனும் நட்டமும் அனுமதிக்கப்படமாட்டாது.<br><br>10.3 நடைமுறை சொத்து மற்றும் பொறுப்புக்களின் வெளிநாட்டு நாணய மாற்றீட்டின் போது எழுகின்ற ஏதேனும் தேறா வருமான நன்மை அல்லது இழப்புக்களின் ஏதேனும் வடிவம் வரி விதிக்கப்படுதல் வேண்டும் அல்லது கழிப்பனவுக்காக அனுமதிக்கப்படுதல் வேண்டும்.<br><br>10.4 வருமானக் கூற்றில் பதிவு செய்யப்பட்ட நாணயமாற்று வித்தியாசங்களின் கணக்கிணக்கமானது, சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.<br><br>10.5 வெளிநாட்டு தொழிற்பாடு ஒன்றின் கையுதிர்வு தொடர்பில் ஏனைய விரிவான வருமானத்தின் திரண்ட நாணயமாற்று வித்தியாசமானது ஓர் மூலதன விடயமாக |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| இல. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் | வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள் |
|---|---|---|
| | | இருப்பதனால் அதனை கவனத்தில் கொள்ளத் தேவையில்லை. வரி நோக்கங்களுக்காக, அத்தகைய வெளிநாட்டு தொழிற்பாட்டின் விற்பனை மீதான இலாபம் அல்லது நட்டம் உரிய ஏற்பாடுகளுக்கமைய கருதப்படுதல் வேண்டும். |
| 11.0 | கடன்படு செலவுகள் (இ. க. நி. 23 இன்படி) | சொத்தொன்றின் மீதான கடன்படு செலவுகள் அதன் கிரயத்துடன் மூலதனமாக்கப்படுமிடத்து, அதன் கடன்படு கிரயம் உள்ளடங்கலாக அச்சொத்தின் கிரயம் மீது கோரப்படும் தேய்மான விடுதொகை தொடரப்பட வேண்டும். எவ்வாறாயினும் , பிரிவு 32 இன் அக்கிரயத்தினை எப்பகுதியும் கழிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. அத்தகைய கடன்படு கிரயத்திற்கான கணக்கிணக்க அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். |
| 12.0 | இளைப்பாறல் பயன் நிதியம் அல்லது திட்டங்கள் (இ. க. நி. 26 இன்படி) | ஏனைய விரிவான வருமானக் கூற்றில் (OCI) அறவிடப்பட்ட ஏதேனும் ஆயுட்கால இலாபங்கள் அல்லது நட்டங்கள் வரி நோக்கத்திற்காக கவனத்தில் எடுக்கப்படுதலாகாது. |
| 13.0 | சொத்துக்களின் சேதமிழப்பு (இ. க. நி. 36 இன்படி) | 13.1 விரிவான வருமான கூற்றில் மறுதலையாக அறவிடப்பட்ட, அனைத்து சேதமிழப்பு இலாபங்கள் அல்லது நட்டங்களும் வரி நோக்கங்களுக்காக கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.<br><br>13.2 தேய்மான விடுதொகை வழங்கலானது கைக்கொள்ளல்/ நிர்மாண செலவின் அடிப்படையிலானதாக அமைதல் வேண்டும்.<br><br>13.3 விடயத்திற்கேற்ப, வருமானக் கூற்றில் அல்லது ஏனைய விரிவான வருமானக் கூற்றில் அறவிடப்பட்ட ஏதேனும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான ஏதேனும் இலாபம் உள்ளடங்கலாக சேதமிழப்பு நட்டங்களின் கணிப்பீட்டு விபரங்களைக் கொண்டிருக்கும் அட்டவணையொன்றினை வழங்குதல் வேண்டும். |
| 14.0 | முதலீட்டு ஆதனம் (இ. க. நி. 40 இன்படி) | 14.1 குறித்த நிறுவனம் காணி மற்றும் கட்டிடத்தின் கிரயத்தை வேறுபடுத்தும் அல்லது பகுதியாக்கும் நியாயக் கோட்பாட்டை சான்றுப்படுத்தப்பட்ட பெறுமதி மதிப்பீட்டாளரின் அறிக்கையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>14.2 நியாயமான பெறுமதியில் கணிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டு ஆதனம் மீது விரிவான வருமானக் கூற்றில் அறவிடப்படக்கூடிய இலாபம் அல்லது நட்டமானது, கவனத்தில் கொள்ளப்படத் தேவையில்லை.<br><br>14.3 முதலீட்டு ஆதன அட்டவணையொன்று, அனைத்து வரி விபரத்திரட்டுகளுடன் இணைந்திருத்தல் வேண்டும்.<br><br>14.4 ஆதனம், பொறி, உபகரணத்திலிருந்து முதலீட்டு ஆதனமாக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அல்லது மீள் வகைப்படுத்தப்பட்ட காணியல்லாத ஏனைய அனைத்து சொத்துக்களும் முதலீட்டு ஆதனத்திற்கு அவற்றின் வரி கழிக்கப்பட்ட பெறுமதியில் மாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் தேய்மான விடுதொகைக்கு தொடர்ந்தும் உரித்தானதாக இருத்தல் வேண்டும்.<br><br>14.5 ஆதன முதலீடு மற்றும் ஆதன வர்த்தகம் ஆகிய இரண்டிலும் ஈடுபடும் ஏதேனும் வர்த்தக நிறுவனமானது, அவ்வியாபாரங்களை வேறு பிரித்து அதற்கமைய கணக்கறிக்கையிடல் வேண்டும். |
| 15.0 | பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள் (இ. க. நி. 2 இன்படி) | 15.1 நியமங்களுக்காக, பொருட்களும் சேவைகளும் நடைமுறைச் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் பங்குதார் நிதியம் மீதான தாக்கம் காட்டப்படல் வேண்டும். |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| *இல.* | *பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம்* | *வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள்* |
|---|---|---|
| | | *15.2* விரிவான வருமான கூற்றில் அறவிடப்பட்ட பங்கு தெரிவு கிரயமானது, ஊழியருக்கு நன்மையளிக்குமெனக் கருதப்பட்ட தொகையின் பரப்பிற்கு தொழில் வழங்குநருக்கு அதன் ஒதுக்கத்தின் போது இடமளிக்கப்பட வேண்டும். |
| *16.0* | வியாபார ஒருங்கிணைப் புக்கள் (இ. க. நி. *3* இன்படி) | *16.1* நன்மதிப்பு கூறுடன் கூடிய காசு பிறப்பிக்கும் பிரிவின் கையுதிர்விலிருந்து கிடைக்கப்பெறும் நன்மைகள் ஏதேனும் மற்றைய ஏற்பாடுகளில் விசேடமாகக் குறிப்பிடப்படாதவிடத்து வரிப்பொறுப்பிற்கு உட்பட மாட்டாது.<br><br>*16.2* விரிவான வருமான அல்லது மற்றைய விரிவான வருமானக் கூற்றில் அறவிடப்பட்ட பேரம் பேசலின் மூலமான கொள்வனவு தொடர்பான இலாபங்கள் வரி பொறுப்பிற்கு உட்பட மாட்டாது.<br><br>*16.3* விரிவான வருமானக் கூற்றில் அறவிடப்பட்ட எதிர்பாராத பெறுமதியிலிருந்து எழுகின்ற நன்மைகள் அல்லது இழப்புக்கள் வரிப்பொறுப்பிற்கு உட்பட மாட்டாது. |
| *17.0* | விற்பனைக்காக வைத் திருக்கப்படும் நடைமுறை யல்லா சொத்துக்களும் முடிவுற்ற தொழிற் பாடு களும் (இ. க. நி. *5* இன்படி) | இ. நி. அ. நி. இன் கீழ் "விற்பனைக்காக வைத்திருக்கப்பட்ட" என வகைப்படுத்தப்பட்ட ஏதேனும் சொத்தின் மீதான தேய்மான விடுதொகை, அது மீள் வகைப்படுத்தப்படும் வரையில் இடைநிறுத்தப்படுதல் வேண்டும். |
| *18.0* | நிதிசார் ஆவணங்கள் (இ. நி. அ. நி. *7*, இ. நி. அ. நி. *9*, இ. க நி *32* மற்றும் இ. க. நி. *39* இன்படி). | *18.1* இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயமான பெறுமதி :-<br><br>"இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயமான பெறுமதி" என வகைப்படுத்தப்பட்ட வருமானக் கணக்கின் நிதிச் சொத்துக்களுக்காக, விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நன்மை அல்லது நட்டம் அவை தேறாத போது வரிக்குட்படுத்தப்பட அல்லது செலவாக அனுமதிக்கப்படும்.<br><br>*18.2* முதலீடுகளை முதிர்வு வரை வைத்திருத்தல் - "முதிர்வு வரை வைத்திருத்தல்" என வகைப்படுத்தப்பட்டவாறாக, பயனுறுதி வாய்ந்த வட்டி விகித முறையினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கான வட்டி வருமானமானது, தொடர்ந்தும் பின்பற்றப்படுதல் வேண்டும். ஆயினும், முதிர்வு வரை வைத்திருத்தலானது, விற்பனைக்காக வைத்திருத்தலென மீள் வகைப்படுத்தப் படுமிடத்து, அதன் கொண்டு செல்லல் தொகைக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் பந்தி *18.4* இற்கு அமைவாக கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். இத்தகைய பரிகாரம் வரி நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.<br><br>*18.3* கடன்களும் பெறத்தக்கவைகளும் - வட்டி வருமானமானது பயனுறுதி வாய்ந்த வட்டி விகித முறையினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். "கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்" மீளவும் அட்டவணைப்படுத்தப்படுமிடத்து, புதிய கடன் பெறுமதிக்கும், நடைமுறை கடன் பெறுமதி மற்றும் பெறத்தக்க பெறுமதி என்பவற்றிற்கிடையிலான வித்தியாசம் உடனடியாகவே விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்படுவதுடன் வருமானமானது ஆரம்ப பயனுறுதி வாய்ந்த வட்டி விகிதத்தில் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுதல் வேண்டும். இப்பிரகாரம் வரி நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.<br><br>*18.4* விற்பனைக்காக காணப்படுபவை :- "விற்பனைக்காக காணப்படுபவை" என வகைப்படுத்தப்பட்ட வருமான கணக்கு தொடர்பான நிதிச் சொத்துக்களுக்காக, மற்றைய விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் மீது வரி விதிக்கப்படவோ அல்லது கழிப்பனவுக்கு |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| இல. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் | வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள் |
|---|---|---|
| | | அனுமதிக்கப்படவோ மாட்டாது. அத்தகைய சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாததாகவோ அல்லது விற்பனை செய்யப்பட்டதாகவோ காணப்படும் போது, வருமானக் கூற்றிற்கு மாற்றப்பட திரண்ட இலாபங்கள் அல்லது நட்டங்கள் மீது வரி விதிக்கப்படும் அல்லது கழிப்பனவுக்கு அனுமதிக்கப்படும்.<br>18.5 "கடன்களும் பெறத்தக்கவைகளும்" மற்றும் "முதிர்வு வரை வைத்திருத்தல்" என வகைப்படுத்தப்பட்ட நிதி ஆவணங்களின் மீது ஏற்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல் செலவுகளும் ஆவணத்திற்குரிய செலவின் ஒரு பகுதியாகவே கருதப்படுதல் வேண்டும்.<br><br>18.6 "இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயமான பெறுமதி" மற்றும் "விற்பனைக்கு உளதான சொத்துக்கள்" என வகைப்படுத்தப்பட்ட சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் செலவானது, அத்தகைய செலவு ஏற்படும் போது அனுமதிக்கப்படும்.<br><br>18.7 பிடித்து வைத்தல் வரியானது, ஒப்பந்த அடிப்படையிலான வட்டி செலவுகள் மீது அறவிடப்படும்.<br><br>18.8 முன்னுரிமைப் பங்குகள் ஆவணத்தின் சட்ட வடிவின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. அதற்கமைய, முன்னுரிமைப் பங்குகள் மீதான வருமானம், வரி நோக்கங்களுக்காக பங்கிலாபமாகக் கருதப்படுதல் வேண்டும்.<br><br>18.9 தனிப்பட்ட ரீதியின் எழுகின்ற குறிப்பிடத்தக்க சேதமிழப்பு அல்லது கூட்டு சேதமிழப்பு தொடர்பான ஏதேனும் சீராக்கலானது, ஐயக்கடன்களின் தற்போதைய நடைமுறையின் அடிப்படையில், ஆணையாளர் நாயகத்தினை திருப்திப் படுத்தினாலன்றி, ஏதேனும் வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கப் படமாட்டாது. ஏதேனும் சேதமிழப்பின் ஏதேனும் எதிர்மறையாக்கமானது அது முன்னதாக அனுமதிக்கப்பட்ட விஸ்தீரணத்தில் வரி விதிக்கப்படும். |
| 19.0 | சமர்ப்பிக்க கோரப்பட்ட மேலதிக அட்டவணை | பின்வரும் மேலதிக அட்டவணைகள் அல்லது விபரங்கள் வரிக் கணிப்பீட்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>எவ்வாறாயினும், கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணைகளில் அல்லது விபரங்களில் ஏதேனும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுடன் சமர்ப்பிக்கக் கோரப்பட்டிருப்பின்., அவ் அட்டவணை அல்லது விபரம் தனியாக சமர்ப்பிக்கக் கோரப்படமாட்டாது. ஆயினும், அக்கூற்றினை மேற்கோள் காட்டுவது போதுமானதாகும்.<br><br>19.1 இ. நி. அ.நி. - 1<br><br>(அ) ஆரம்ப மீதியின் கணக்கிணக்கம் (ஒழுங்குவிதி 1.1) ;<br>(ஆ) முதல் தடவை செயற்படுத்தும் செலவுகளின் அட்டவணை (ஒழுங்குவிதி 1.2);<br>(இ) பின்பற்றிய முதலாம் ஆண்டின் மேலதிக/வரி மீளளிப்பு நிலை (ஒழுங்குவிதி 1.3) ;<br><br>19.2 இ. க. நி.- 12<br><br>நியமத்தின்படியான அனைத்து பிற்போடப்பட்ட வரி வெளிப்படுத்துகைகள் (ஒழுங்கு விதி (4.0)<br><br>19.3 இ. க. நி.- 16<br><br>(அ) காணி மற்றும் கட்டிடங்களுக்கிடையிலான செலவுப் பகிர்வு அட்டவணை (ஒழுங்குவி 5.2) ; |

**ஒழுங்குவிதிகள்** *(தொடர்ச்சி)*

| இல. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு நியமம் | வரி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அளிக்கப்படுவதற்கு தேவையான சீராக்கல்கள்/தகவல்கள் |
|---|---|---|
| | | (ஆ) சொத்துக்களின் செலவில் உள்ளடங்கியுள்ள சேர்க்கப்பட்ட வட்டி விபரங்கள் (ஒழுங்குவிதி 5.3);<br>(இ) ஆனதம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றிற்கு இடம்பெற்ற பதவியினர் செலவுகளின் அட்டவணை (ஒழுங்குவிதி 5.4);<br><br>(ஈ) "சீராக்கப்பட்ட தேய்மான விடுதொகை" அட்டவணை (ஒழுங்குவிதி 5.6 (ஆ) ;<br><br>(உ) முதன்முறையாக பின்பற்றுவோருக்கான இ. க. நி. இன் கீழான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மொத்த செலவுக்கும் இ. நி. அ. நி. இன் கீழான அத்தகைய ஆதனம், பொறி மற்றும் இயந்திரம் ஆகியவற்றின் பகுதியாக்கப்பட்ட செலவுக்குமிடையிலான கணக்கிணக்கம் (ஒழுங்குவிதி 5.7 (அ) ) ;<br><br>(ஊ) முதல் தடவையாக பின்பற்றுவோருக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் கீழான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த செலவிற்கும் இ. நி. அ. நி. இன் கீழான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அத்தகைய பகுதியாக்கப்பட்ட செலவுகளுக்கும் இடையிலான கணக்கிணக்கம் (ஒழுங்குவிதி 5.7. (ஆ) ;<br><br>*19.4* இகநி - *18*<br>பிற்போடப்பட்ட வருமானக் கூறுகள் அறிக்கை (ஒழுங்குவிதி 7. 2).<br><br>*19.5* இகநி - *21*<br><br>வருமானக் கூற்றில் பதிவு செய்யப்பட்ட நாணயமாற்று வித்தியாசத்தின் கணக்கிணக்கம் மீதான கூற்று (ஒழுங்குவிதி 10. 4).<br><br>*19.6* இகநி - *23*<br><br>ஒவ்வொரு சொத்தின் மீதும் மூலதனமாக்கப்பட்ட வட்டியின் கணக்கிணக்கம் ஒழுங்குவிதி 11.0).<br><br>*19.7* இகநி - *36*<br><br>வருமானக் கூற்று அல்லது ஏனைய விரிவான வருமானக் கூற்றில், விடயத்திற்கேற்றவாறு அறவிடப்பட்ட மீள் பெறுமதியிடப்பட்ட சொத்துக்கள் மீதான நன்மை உள்ளடங்கலாக இயக்கமுறா நட்டங்களுக்கான விபரமான கணிப்பீட்டைக் கொண்ட அட்டவணை. (ஒழுங்குவிதி 13.3).<br><br>*19.7* இகநி - *40*<br><br>(அ) சான்றுப்படுத்திய பெறுமதி மதிப்பீட்டாளரின் அறிக்கையிலுள்ள கட்டிடத்திலிருந்தான காணியினைப் பகிர்ந்தளிக்கும் அல்லது வேறுபடுத்தும் செலவின் பகிர்வொன்றில் பயன்படுத்தப்படும் கோட்பாட்டின் அடிப்படை (ஒழுங்குவிதி 14.1).<br><br>(ஆ) முதலீட்டு ஆதனங்களின் அட்டவணை (ஒழுங்குவிதி 14.3). |

*4- 693*